# 14

## யோராம்

# ஒரு அடிவைப்பு எதிர்நடத்தல்

*வேதபாடப் பகுதி: 2 இராஜாக்கள் 1:17; 9:26*

"தொடங்கினார் ஆனால் முடிக்கவில்லை" என்பவை, மக்களில் பலர் தங்களின் வாழ்வை வாழ்ந்துள்ளது பற்றி மிகச்சிறப்பாக விவரிக்கும் வார்த்தைகளாய் இருக்கின்றன. அவர்கள் "முடிக்காதவர்கள்," என்ற வகையில் பணியாற்றி வாழ்ந்தவர்களாக, பல்வேறு தொழில்களில் குதித்து, அவற்றில் பாதிவரையில் சென்று, பின்பு வெளியேறிய மக்களாக இருக்கின்றனர்.

டெக்சாஸ் மாகாணத்தின் அமரில்லோ என்ற இடத்தில் உள்ள சபையின் செய்திக்குறிப்பில், டிக் மார்சியர் என்பவரால் எழுதப்பட்ட, ஓபராமெர்காவ் என்ற இடத்திற்கு அருகில் பவேரியன் ஆல்ப்ஸ் என்ற இடத்தில் இருந்த சிற்றுண்டிச்சாலை பற்றிய கட்டுரையொன்று அடங்கியிருந்தது. அந்தச் சிற்றுண்டிச் சாலையானது, மலையேறும் சாலையின் பாதிவழிகளில் இருந்த "ஓய்வு நிறுத்தத்தின்" ஒரு வகையாகும், அந்த மலை ஏறுவதற்குப் பயிற்சி பெறுபவர்களின் சிகரம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. நிறுத்தும் அவ்விடம் "பாதிவழி வீடு" என்று அழைக்கப்பட் டுள்ளது. அதை நடத்திய மனிதர், அந்த இடத்தை "சந்தோஷமற்ற இடம்" என்றும், அந்தச் சிற்றுண்டிச் சாலையின் மேலாளர் என்ற வகையில் தமது பணியை "சந்தோஷமற்ற வேலை" என்றும் திகைப்புக்குரிய வகையில் சித்தரிக்கின்றார். அவர் தமது வேலையை ஏன் இவ்வாறு சித்தரிக்கின்றார் என்று அவரிடத்தில் கேட்கப்பட்டபோது, அவர் பின்வருமாறு விளக்கத்தைக் கொடுத்தார்:

> மக்களின் பெருங்கூட்டம் ஒன்று உற்சாகத்துடன் மலையில் ஏறத் தொடங்கும். அவர்கள் எனது பாதி வழி இல்லத்தை அடைந்த வேளையில், பெரும்பான்மையானவர்களின் உற்சாகம் மறைந்து போயிருக்கும். ஒருபுறத்தில், கீழுள்ள உலகைக் காண்பதற்குப் பெரிய திறந்த ஜன்னல் இருக்கிறது, மலையேறுபவர்கள் காட்சியின் அழகு பற்றிய மனமகிழ்ச்சி மற்றும் மகிழ்வுரையாடலின் வெளிப்பாடுகளுடன் அதை நோக்கி விரைந்தனர். ஆனால் மறுபுறமாக, மலையின் உச்சியை நோக்கி அவர்கள் கண்ணோக்கியபோது, அவர்கள் எல்லாருடைய ஊக்கமும் ஆர்வமும் கரைந்து போயிற்று. அவர்கள் பெரிய தீயிடம் ஆர்ப்பரிக்கும் நெருப்புடன் இருப்பதையும் அதைச் சுற்றிலும் வசதியான நாற்காலிகளும் சூடான காஃபி மற்றும் சிற்றுண்டி வகைகளுடன் புத்துணர்ச்சியூட்டும் மேஜையும் இருப்பதைக் கண்டு,

*அவர்கள் போதிய தூரம் ஏறியிருப்பதாக முடிவு செய்கின்றனர். அவர்களில் ஏறக்குறைய பாதிப்பேர் இதைத் தாண்டி ஒருக்காலும் செல்வதில்லை. அவர்கள் யாவரும், தாங்கள் களைப்புற்று இருப்பதாகவும், தங்கள் பாதங்கள் ஈரமாயிருப்பதாகவும், பனியானது மிகவும் ஆழமாய் இருப்பதாகவும் தங்கள் வழிகாட்டியிடம் கூறுகின்றனர்.*

*அவர்கள் ஓய்வற்ற குழுவாக இருக்கின்றனர், ஆனால் அவர்கள் கேளிக்கை செய்ய விரும்புகின்றனர். அவர்கள் அவ்வப்போது, காந்தத்தால் இழுக்கப்பட்டது போல, பெரிய ஜன்னல் அருகில் சென்று, உச்சிக்குச் செல்லும் கூட்டத்தைக் கவனிக்கின்றனர். படிப் படியாக, எல்லாவிஷயமும் அமைதியாகும் மற்றும் அவர்களில் ஒருவர், "அவர்கள் உச்சியில் இருக்கின்றனர்!" என்று ஆச்சரியப் படுவார். பின்பு அந்தக் குழுவினர் எல்லார்மீதும் இருள் கவிழ்ந்து அமைகிறது. மலையேறியவர்கள் பிரகாசமான, சிரிக்கும், மற்றும் வெளிர்சிகப்பு நிறக்கன்னங்கள் ஆகியவற்றுடன் திரும்பும்போது, பாதிவழி வீட்டில் தங்கியிருந்தவர்கள் பரிதாபத்திற்கு உரியவர்களாக இருக்கின்றனர்.[1]*

*ஒரு திட்டத்தை ஒருவர் பாதிவழி வரையில் மாத்திரம் செய்திருக்கக் கண்ணோக்கி இருக்கும்போது, மன எழுச்சியூட்டும் ஒரு சாதனையில் சலிப்பும் ஏமாற்றமும் சேர்ந்து கொள்கின்றன.*

*ஓட்டத்தின் நடுப்பாகம்தான் மிகக் கடினமான பாகம் என்று ஓட்டப் பந்தய வீரர்கள் கூறுகின்றனர். முதல் ஒருசில மைல்கள் மிகக்கடினமா யிருப்பதில்லை, ஏனென்றால் ஓட்டப்பந்தய வீரர்கள் புத்துணர்வுடனும் ஏராளமான சக்தியுடனும் இருப்பார்கள். கடைசி ஒன்று அல்லது இரண்டு மைல்கள் கடினமானவைகளாக இருந்தாலும் சகிக்கக்கூடியவைகளாக இருக்கின்றன, ஏனென்றால் ஓட்டப்பந்தய வீரர்கள், ஏற்கனவே தங்கள் பயங்கரமான ஓட்டத்தை ஏறக்குறைய முடித்திருப்பதை அறிகின்றனர். இடையில் உள்ள மைல்கள், அந்த விருப்பக்குறைவான, அழைப்புவிடுக்காத மைல்கள்தாம், மிகக்கடினமானவைகளாக உள்ளன. மத்திய வழியில் உள்ள இடமானது வேதனையையும் ஒழுங்குபடுத்துதலையும் தவிர, அளிப்பதற்கு வேறெதையும் கொண்டிருப்பதில்லை; இந்தப்பகுதியானது சகித்துக்கொள் ளப்பட வேண்டியதாகும். வெற்றிகரமான ஒவ்வொரு ஓட்டப் பந்தய வீரரும், இந்த மத்தியவழி இடமானது தன்னை ஊக்கமிழக்கவும் பந்தயத்தில் இருந்து வெளியேறவும் செய்ய அனுமதிப்பதில்லை என்று தமக்குள் முடிவு செய்ய வேண்டியதாக உள்ளது.*

*ஒரு பணிப்பொறுப்பைத் தொடங்குகிற மக்கள் பாராட்டப்பட வேண்டும்; தங்கள் பொறுப்புகளில் சோம்பேறித்தனமாயிருக்கிற எண்ணற்ற மற்றவர்களைப்போல் இராமல், அவர்கள் குறைந்தபட்சம் வேலையைத் தொடங்குவது என்பதையாவது தேர்ந்துகொண்டுள்ளனர். ஒருக்காலும் தொடங்காதிருத்தல் என்பது ஒருவருடைய வாழ்வின் மாபெரும் துன்பங்களில் ஒன்றாக உள்ளது. பயணத்தைத் துவங்கி வெளிச்செல்லுதல் என்பது பெரிய முக்கியமான அடிவைப்பாக உள்ளது. இருப்பினும், எந்த ஒரு முயற்சிக்கும் அதன் நிறைவேற்றமே உண்மையில்*

*குறிப்பிடத்தக்கதாக உள்ளது. ஒரு முயற்சியைத் தொடங்கி ஆனால் இருதயத்தை இழந்து அதை நிறைவேற்றுவதற்குச் சகிப்புத்தன்மையைக் கூட்டிச் சேர்க்க இயலாதவர்கள்மீது நாம் பரிதாபப்படுகின்றோம். பாதி வழியில் வெளியேறிவிடுதல் என்பதில் அங்கலாய்ப்பு உள்ளது, மற்றும் ஒரு வேலையை முடிக்கும் வரை நிலைத்திருப்பதில் வீரார்ந்த தன்மை உள்ளது.*

*வெளியேறுபவர்களை மூன்று வகுப்பினராகப் பிரிக்க முடியும்: முதலாவது, மக்களில் சிலர் தொடங்குவதாக உறுதிமேற்கொள்கின்றனர், ஆனால் அந்த உறுதியை ஒருக்காலும் நிறைவேற்றுவதில்லை. அவர்கள் ஒரு முடிவை மேற்கொள்வதினால் சரியான திசையில் ஒரு அடி எடுத்து வைக்கின்றனர், ஆனால் அந்த வாக்குறுதியை நிறைவேற்றுதலை நோக்கி இன்னொரு அடி எடுத்து வைப்பதில்லை. இரண்டாவது, ஒருசில அடிகள் எடுத்து வைத்துவிட்டு பின்பு வெளியேறி விடுகின்றனர். அவர்கள் கூட்டத்தின் மத்தியில், பயணத்தில் ஒருசில மைல்களுக்குப் பின்பு நின்று விடுகின்றனர். மூன்றாவது, மக்களில் சிலர் பாதிவழி இடத்திற்கும் அப்பால் செல்லுகின்றனர், ஆனால் அவர்கள் முடிவை நெருங்குமுன்பு களைத்துப் போய் வெளியேறுகின்றனர். அவர்கள் தாம் இந்தக் குழுக்கள் யாவற்றிலும் மிகவும் கவலைக்குரியவர்களாய் இருக்கின்றனர், ஏனெனில் அவர்கள் இலக்கின் காட்சிக்குள் வந்தும் முயற்சியை விட்டுவிடுகின்றனர்.*

*முதல் அடியெடுத்து வைப்பவர்களான, அதாவது முதலடி எடுத்து வைத்து, பின்பு தொடர்ந்து நடக்காமல் இருக்கின்றவர்களான, முதலாவது குழுவைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்ப்போம். அவர்கள் வாக்குறுதி அளிக் கின்றனர், ஆனால் அதை நிகழ்த்துவதில்லை. அவர்கள் சரியான திசையில் முன்னோக்கிச் செல்லுகின்றனர், ஆனால் தொடக்கத்திலேயே முயற்சியை நிறுத்தி விடுகின்றனர்.*

*இஸ்ரவேல் நாட்டின் ஒன்பதாவது அரசரான யோராம்,[2] இந்த அசாதாரணத் தன்மைக்கு மிகச்சிறப்பான உதாரணமாக இருக்கின்றார். அகசியா பிள்ளைகளின்றி இறந்து போனதால், ஆகாபின் இரண்டாவது மகனான யோராம் இஸ்ரவேலின் அரசராக ஆட்சி செய்ய வந்தார். அகசியா காலத்திற்கு முன்பாக மரணம் அடைந்தபோது, யோராம் அரியணையில் ஏறி, கி.மு. 852 முதல் 841 வரை பன்னிரெண்டு ஆண்டுகள் ஆட்சி செய்தார் (2 இராஜாக்கள் 3:1).*

## ஒரு பொதுவான தவறு

*வெகு காலத்திற்குப் பிறகு, இஸ்ரவேலின் ஒரு அரசரைப் பற்றிப் பாராட்டத்தக்க விஷயங்கள் கூறப்படக்கூடும். அவர் சத்தியத்தை நோக்கி ஒரு சிறு அடிவைப்பை எடுத்து வைத்தார். அவர் தமது தந்தையாகிய ஆகாப் அமைத்திருந்த உருவத்தை [சிலையை] நீக்கிப்போட்டார். "அது அதிகமானதல்ல!" என்று நீங்கள் கூறலாம், ஆனால் அது குறைந்தபட்சம் ஒரு அடிவைப்பாக உள்ளது. அவர் துன்மார்க்கராய் இருந்தார், ஆனால் அவர் ஒரு நல்ல செயலைச் செய்தார்.*

*கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்; ஆனாலும் தன் தகப்பனைப்போலும் தன் தாயைப்போலும் அல்ல; தன் தகப்பன் பண்ணுவித்த பாகாலின் சிலையை அகற்றிவிட்டான் (2 இராஜாக்கள் 3:2).*

*யோராம் செய்தவற்றைப் பற்றிய பலவிவரங்கள் நமக்குத் தரப்பட்டிருப்பதில்லை, ஆனால் அவர் - ஒரு சுருக்கமான காலகட்டத்திற்கு - செய்யப்பட வேண்டியவற்றை நோக்கித் தமது பாதங்களை எடுத்து வைத்தவராகக் காணப்படுகின்றார். அவர் சரியான திசையில் தொடர்ந்து நடையிடவில்லை, ஆனால் சீர்திருத்தத்தை நோக்கி அவர் ஒரு அங்குலம் முன்னேறினார்.*

*அவர் தேவனைப் பின்பற்றுவதற்கான உண்மையான விருப்பம் எதினாலும் அல்ல, ஆனால் அரசியல்ரீதியான காரணங்களுக்காக [பாகாலின்] சிலையை நீக்கிப் போட்டிருக்கலாம். ஒருவேளை அவர் மக்களைப் பிரியப்படுத்துபவர்போல நடித்திருக்கலாம். யேசபேலின் மதவெறியும் பாகாலியத்திற்கு ஆகாப் அனுமதித்திருந்ததாலும் மக்கள் மத்தியில் தனது ஓட்டத்தைக் கொண்டிருந்தது என்பது உறுதி. யெகோவாவை ஆராதிப்பதற்குப் பதில் பாகாலை ஆராதித்தலை வைப்பதற்கான யேசபேலின் முயற்சி தனது பலத்தில் அதிகமானதை இழந்திருந்தது, தேவனுடைய ஒற்றை ஆள் இராணுவமாக இருந்த எலியாவுக்கு நன்றி. பிற்பாடு, நாம் இஸ்ரவேலில் இருந்த பாகாலின் ஆசாரியர்கள் எண்ணிக்கையில் குறைந்து போனதையும், யெகூ என்பவர் இந்த ஆசாரியர்களில் பெரும்பான்மையானவர்களைக் கொல்வதற்காக, அவர்களைப் பாகாலின் ஒரு கோவிலுக்குள் ஒன்றுகூட்ட முடிந்ததையும் காண்போம் (2 இராஜாக்கள் 10:18). அப்படிப்பட்ட நிகழ்ச்சியானது, பொதுவாக மக்கள் யெகோவாவை ஆராதிக்கப் பின் திரும்பியிருந்தனர் என்று நம்பும்படி நம்மை வழிநடத்துகிறது; இல்லையென்றால், யெகூவின் இந்தச் சீர்திருத்தம் அவ்வளவு சுலபமாகச் செயல்படுத்தப்பட்டிருக்க முடியாது. இந்த வேளையில் பொதுஜன அபிப்பிராயமானது பாகாலைக் காட்டிலும் யெகோவாவுக்கு மிகுந்த ஆதரவாக இருந்திருக்க வேண்டும். இந்த மாற்றத்தைக் கண்ட யோராம், தாம் கொண்டிருந்த எந்த உறுதிப்பாட்டினாலும் அல்ல, ஆனால் மக்களின் ஆதரவை ஆதாயப்படுத்திக் கொள்வதற்காகவே [பாகாலின்] சிலையை அகற்றிப் போட்டிருக்கலாம்.*

*நாம் யோராமுக்கு, சந்தேகத்தின் பலன்களைக் கொடுத்து, சீர்திருத்தத்தை நோக்கி மாண்புமிகுந்த முடிவை மேற்கொள்வதற்காக அவர் ஒருமுறையாவது தமது இருதயம் தூண்டப்பட்டவராக இருந்தார் என்று கூறினும்கூட, அப்போதும் நாம் அவரது முடிவானது விளைவுள்ள எந்த செயலுக்கும் வழி நடத்தவில்லை என்று ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கும். அவர் ஒரே ஒரு சிறிய அடிவைப்பை எடுத்து வைத்தார்; அவர் நடையை மேற்கொள்ளவில்லை. புறதெய்வ விக்கிரகாராதனையை நீக்கிப்போட முயற்சியை அவர் மேற்கொண்டிருந்திருப்பார் என்றால், அது ஒன்றையும் அர்த்தப்படுத்தியிராத மற்றும் விரைவிலேயே ஒழிந்துபோன அற்பமான*

*முயற்சியாகவே இருந்தது.*

*யோராம் தமது ஆட்சியின்போது, யோசபாத்தின் மூலமாக யூதாவுடன் ஒரு நெருங்கிய உடன்படிக்கையைப் பராமரித்தார். ஒருவேளை இந்தச் செல்வாக்கு அவரை அவரது தந்தை, தாய் மற்றும் சகோதரர் ஆகியவர் களைக் காட்டிலும் சிறிதே சிறந்தவராக்கியிருக்கலாம். நாம் கண்டுள்ளபடி அவர், ஆகாப் வைத்த பாகாலின் உருவச்சிலையை நீக்கிப்போட்டார், ஆனால் அவர் யெரொபெயாமின் விக்கிரகாராதனையைப் பராமரித்தார் என்பதைக் கூடுதலாகக் கூற, ஏவுதல் பெற்ற எழுத்தாளர் விரைந்தார் (2 இராஜாக்கள் 3:2, 3). இவ்விதமாக அவர் ஒருக்காலும் தேவனிடத்தில் உண்மையாகத் திரும்பவில்லை.*

*அவரது வாழ்வின் இந்தச் சிறு துணுக்கு, அவர் தொடங்கி வைத்த சிறிய சீர்திருத்தம் என்பது, நாம் வாழ்வதில் செய்யக்கூடிய பொதுவான/ சாதாரணமான தவறைப் பற்றிப் பலதொகுதிகளை நமக்கு உரைக்கிறது. நாம் பரிசுத்தமான நடக்கையை விளைவிக்காத, காட்சிப்படுத்தும் உரிமை கோருதல்களை ஏற்படுத்தாமல் இருக்கும்படி எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். நாம் பணியை மேற்கொள்ளாமல் பொருத்தனையை ஏற்படுத்த முடியாது.*

## ஒரு பேரழிவான விளைவு

*தேவபக்தியை நோக்கி ஒருகணம் மாத்திரம் செயல்புரியத் தொடங்கி, ஆனால் தேவபக்தியுள்ள வாழ்வை ஒருக்காலும் மேம்படுத்திக் கொள்ளாத ஒரு நபர், எங்குமே செல்லாத பழைய கார் ஒன்றைப் போன்றவராக இருக்கின்றார். நீங்கள் அதன் சாவியைப் போட்டுத் திருப்புவீர்கள், ஆனால் அந்தக் கார் புகையைத் துப்பி, உமிழ்தல்களை வெளிப்படுத்தி, குலுங்கி, பின்பு இயக்கமற்றுப் போகிறது; அது சாலையில் சர்ரென்று ஒருக்காலும் செல்லாது. அது போக்குவரத்துக்கு உதவுவதற்காக அல்ல, ஆனால் ஒரு தலைவலியாக, வண்ணம் தீட்டப்பட்ட குப்பை குவியலாக மாத்திரமே உள்ளது.*

*ஒருவாழ்வு நடையை ஒருக்காலும் விளைவிக்காத ஒரு முடிவை அடைதலானது ஏன் மிக உயர்ந்த அளவிலான தவறாக உள்ளது என்பதற்கு யோராம் மூன்று காரணங்களை விவரிக்கின்றார். ஒரு அடிவைப்பு மாத்திரம் எடுத்து வைத்துவிட்டுப் பின்பு நடையைத் தொடராத, அல்லது வாழ்வை வாழாத ஒருவர், இழிவாகத் தோல்வியடைகின்றார் என்பதை அவர் நமக்குக் காண்பிக்கின்றார்.*

### மனிதரால் மதிக்கப்படாதிருத்தல்

*முதலாவது, நீதியான வாழ்வை யோராம் ஒருக்காலும் மேற்கொள் ளாமல் இருந்தபடியால், அவர் மனிதரால் மதிக்கப்படவில்லை. அவரைச் சுற்றிலும் இருந்தவர்கள் அவரை, வாழ்வின் போராட்டத்தில் உண்மை யாகப் பங்கேற்றவராக அல்ல, ஆனால் ஒரு தோல்வியாளராக, முதுகெலும் பற்ற கோழையாகக் கண்ணோக்கினர். 2 இராஜாக்கள் 3ல் தீர்க்கதரிசியான எலிசா, யோராமை ஒப்புக்கொள்ளாமல்/மதியாமல்கூட இருந்தார்*

என்பதைக் கவனியுங்கள்.

அகசியா அரியணை ஏறியபோது, மோவாபியர்கள் இஸ்ர வேலுக்குத் தாங்கள் கீழ்ப்பட்டிருத்தலுக்கு எதிராகக் கலகம் செய்தனர். அதிகாரமற்ற, துன்மார்க்கரான அரசராயிருந்த, அகசியா அதைப்பற்றி ஒன்றும் செய்யக் கூடாதவராய் இருந்தார் (2 இராஜாக்கள் 3:4, 5). அகசியா இரண்டு ஆண்டுகளில் சிலபகுதிக் காலம் மாத்திரமே ஆட்சி செய்திருந்தார் என்பதால், ஒருவேளை யோராமே, மோவாபியர் கப்பம் கட்ட தவறிய விஷயத்தை எதிர்கொண்ட முதல் அரசராக இருந்திருக்கலாம். மோவாபியரை மீண்டும் தமது ஆளுகை வட்டாரத்திற்குள் கொண்டுவருதல் என்பதே அவரது உடனடியான முடிவாக இருந்தது. அவர் தமக்கு உதவி தேவை என்பதை அறிந்த நிலையில், தமது தகப்பனின் கூட்டாளியும், யூதாவின் அரசருமான யோசபாத்திடத்திலும், ஏதோமின் அரசிடத்திலும் உதவி நாடினார் (2 இராஜாக்கள் 3:7, 8). அவ்விரு அரசர்களும் உதவிபுரியச் சம்மதித்து, யுத்தத்திற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன. அவர்கள் மோவாப் நாட்டை தெற்கில் இருந்து அணுகும்படி, சவக்கடலின் தென்முனையைச் சுற்றிச் செல்லும் நீண்ட பாதையில், மோவாபுக்கு எதிராக அணிவகுத்துச் சென்றனர்.

ஏழுநாள் பயணத்தில் அவர்களிடத்தில் இருந்த தண்ணீர் தீர்ந்து போயிற்று (2 இராஜாக்கள் 3:9, 10). அவர்கள் வந்திருந்த பகுதியில் இருந்த ஊற்றுக்கள் பஞ்சத்தின் காரணமாக வற்றிப்போய் இருந்தன, மற்றும் அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட தண்ணீர்த் தவனத்தினிமித்தம் பெரும் சோர்வடைந்திருந்தனர். என்ன செய்யலாம் என்று தங்களை வழிநடத்தத் தீர்க்கதரிசி ஒருவர் வேண்டும் என்று யோசபாத் கேட்டார், மற்றும் அவ்விடத்திற்கு அருகில் முகாமிட்டிருந்த எலிசாவின் பெயர் பரிந்துரைக்கப் பட்டது (2 இராஜாக்கள் 3:11). மூன்று அரசர்களும் எலிசாவைக் கண்டு அவரது உதவியை வேண்டுவதற்குச் சென்றனர். பெருவருத்தமான காலத்தில், அரசர்கள்கூடப் பிச்சைக்காரர்கள் ஆகிவிடுகின்றனர். அம்மூவரின் சார்பாகப் பேசியவரான யோராம், தங்களுக்கு உதவும்படி எலிசாவிடம் வேண்டுகோள் விடுத்தார். ராஜரீகத்தினால் பயமடையாத எலிசா, யோராமை நோக்கினார் மற்றும் அவரை அவர் இடத்தில் வைத்தார்:

> "எலிசா இஸ்ரவேலின் ராஜாவைப் பார்த்து: எனக்கும் உமக்கும் என்ன? நீர் உம்முடைய தகப்பனின் தீர்க்கதரிசிகளிடத்திலும், உம்முடைய தாயாரின் தீர்க்கதரிசிகளிடத்திலும் போம் என்றான்." அதற்கு இஸ்ரவேலின் ராஜா: "அப்படியல்ல, கர்த்தர் இந்த மூன்று ராஜாக்களையும் மோவாபியரின் கையில் ஒப்புக்கொடுக்கிறதற்கு வரவழைத்தார் என்றான்." அதற்கு எலிசா: "நான் யூதாவின் ராஜா வாகிய யோசபாத்தின் முகத்தைப் பாராதிருந்தால் நான் உம்மை நோக்கவுமாட்டேன், உம்மைப் பார்க்கவுமாட்டேன் என்று சேனை களுடைய கர்த்தருக்கு முன்நிற்கிற நான் அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்" (2 இராஜாக்கள் 3:13, 14).

ஆவிக்குரிய விஷயங்களைப் பற்றி யோராமிடம் பேசுதல் என்பது,

*நயப்பாங்கு பற்றி ஹாலிவுட் நடிகையிடம் பேசுதலைப் போன்றோ அல்லது நேர்மையைப் பற்றி கொள்ளைக் கூட்டம் ஒன்றிடம் பேசுதலைப் போன்றோ இருக்கும் என்று எலிசா அறிந்திருந்தார். உறுதிப்பாடு அல்லது ஒப்புவிப்பு என்பவற்றினால் அல்ல, ஆனால் ஒரு இடர்ப்பாட்டின் காரணமாகவே, யோராம் யெகோவாவைப் பற்றிப் பேசினார் என்பதை அவர் [எலிசா] அறிந்திருந்தார். ஆகையால், யோசபாத்தினிமித்தமாக மாத்திரமே, எலிசா கர்த்தரை நாடினார், மற்றும் கர்த்தர் யோசபாத்தினிமித்தமாக இஸ்ரவேலுக்கு வெற்றி தரப்படுமென்று வெளிப்படுத்தினார். அவர்கள் அந்தப் பள்ளத்தாக்கு முழுவதிலும் வாய்க்கால்களை வெட்ட வேண்டும் என்று கூறப்பட்டனர். தேவன் அவர்களின் காட்சிக்கு அப்பால் இருந்து, தண்ணீரைத் தாமே அனுப்பப் போவதாகக் கூறினார் (2 இராஜாக்கள் 3:16-19). அடுத்த நாள் காலையில் அந்த வாய்க்கால்கள் தண்ணீரால் நிரம்பியிருந்தன (2 இராஜாக்கள் 3:20).[3]*

*அடுத்த நாள் காலையில் மோவாபியர் யுத்தம் செய்ய வந்தபோது, சூரியன் அந்தத் தண்ணீரின் மேல் பிரகாசித்ததினால், அந்தத் தண்ணீர் அவர்களுக்கு, வன்மையான போராட்டத்தின் பின்விளைவாக ஏற்பட்ட இரத்தம்போல் சிவப்பாய்க் காணப்பட்டது (2 இராஜாக்கள் 3:22). அவர்கள் இம்மூன்று அரசர்களும் ஒருவர் மற்றவருடன் போரிட்டு அதனால் தான் தரையானது இரத்தத்தினால் சிவப்பாயிற்று என்று முடிவு செய்தனர் (2 இராஜாக்கள் 3:23). அவர்கள் யுத்தத்தில் எஞ்சிய பொருட்களைச் சேகரிப்பதற்காக முகாமிற்குள் விரைந்தனர். இம்மூன்று அரசர்களின் இராணுவங்கள் எழும்பி, சந்தேகப்படாதிருந்த மோவாபியர்களைக் கொன்றுபோட்டு முற்றிலுமாக அவர்களைத் தோல்வியடையச் செய்தனர். ஏற்கனவே முன்னுரைக்கப்பட்டிருந்தபடி, அவர்கள் நகரங்களுக்கு முன்னேறிச் சென்று, மோவாப் நாடு முழுவதையும் இடித்துத் தரைமட்டமாக்கினர் (2 இராஜாக்கள் 3:25). கடைசியில், அவர்கள் மோவாபிய அரசரான மேசாவை, கிராரேசேத் என்ற இடத்தில் சுற்றி வளைத்தனர், மற்றும் அவரை அழிக்கத் தயாராயினர் (2 இராஜாக்கள் 3:25, 26).*

*பெரிதும் வருத்தமுற்ற மேசா, தமது மூத்த மகனை ஒவ்வொருவரும் கண்ணோக்கும்படி மதில்மீது சர்வாங்க தகன பலியாகச் செலுத்தினார் (2 இராஜாக்கள் 3:27). ஒருவேளை அவர், அப்படிப்பட்ட ஒரு பலி, தமது இராணுவத்தை எழுப்பி இஸ்ரவேல் மக்களை வேறெதுவும் செய்யக்கூடாதபடி ஒழுக்கவீனப்படுத்தும் என்று நினைத்து இந்தத் தீய செயலைச் செய்திருக்கலாம். யூதா ஜனங்கள், ஏதோமியர்கள் மற்றும் இஸ்ரவேலர்கள் யாவரும் அவர்களிடத்தில் இருந்து புறப்பட்டுப் போய் அவர்களைத் தனியே விடும் அளவுக்கு அவரது செயல்கள் மிகவும் பயங்கரமாயிருந்தன.[4]*

*எலிசா மற்றும் தேவன் ஆகியோரின் உதவியுடன், இம்மூன்று இராணுவங்களும், மோவாபியரைத் தோல்வியடையச் செய்வதில் வெற்றி நிறைந்தவர்கள் ஆயினர் (2 இராஜாக்கள் 3:4-27), ஆனால் மோவாபியர் கீழ்ப்படியும்படி கொண்டுவரப்படவில்லை. அவர்கள் “தங்களின் சொந்தப்*

புண்களைத் தாங்களே நக்கும்"படி தனிமையில் விடப்பட்டனர் மற்றும் இந்த நிர்மூலத்திற்கு அருகிலான நிகழ்ச்சிக்குப் பின்பு அவர்கள் மீண்டும் குழுவாயினர்.

யுத்தத்திற்கு முன் எலிசா யோராமை நடத்திய விதம், கர்த்தரால் யோராம் ஒரு அரசராயிருக்கக்கூடாத வறிய ஒரு சாக்குப்போக்கு என்று கருதப்பட்டதைச் சுட்டிக்காண்பிக்கிறது. அவரது இருதயம் தீர்க்கதரிசியினால் எக்ஸ்-கதிர் சோதனைக்கு உட்பட்டது, மற்றும் அவர் யாராயிருந்தார் என்பது வெளிப்படுத்தப்பட்டது - அவர் தன்னுடையதல்லாத உதவிக்காகத் தேவனைத் தேடும் நடத்துனராக இருந்தார், ஆனால் தேவன் கட்டளையிட்டபடி நடக்க அவர் [யோராம்] ஒருக்காலும் நோக்கம் கொண்டிருந்தவர் அல்ல. மற்ற பலரைப்போன்று அவரும், தேவனுடைய மக்களுக்கான ஆசீர்வாதங்களை விரும்பினார் ஆனால் பொறுப்பை ஏற்றுக்கொள்ளாதவராக இருந்தார். யோராமைப் பொறுத்தமட்டில், தீர்க்கதரிசி என்பவர் புட்டியில் உள்ள ஒரு பூதமாக - புலன்ரீதியான விருப்பங்களை நிறைவேற்றும் ஊழியனாக - இருந்தாரே தவிர, தேவபக்தியுள்ள வாழ்விற்கு வழிநடத்தும் ஆவிக்குரிய வழிகாட்டியாயிருந்ததில்லை.

**சத்தியத்தினால் செயல்விளைவு ஏற்படுத்தப்படாதிருத்தல்**

இரண்டாவது, சத்தியத்திற்கு யோராமின் இருதயம் பதில்செயல் செய்யாததாகி இருந்ததில், முழுவழியிலும் செல்வதற்குப் பதிலாகப் பாதி வழி மாத்திரம் போவதில் உள்ள துன்பம் காணப்படுகிறது. யோராமின் ஆளுகைக் காலம் என்பதே அவருக்கு இருந்த ஒரே ஆசீர்வாதமாயிருந்தது. அவர் எலிசா என்ற தீர்க்கதரிசியின் ஊழியத்தினுடைய உச்சக் காலத்தில் அரியணை ஏறினார். எலிசாவின் மூலமாகத் தேவன் கொடுத்திருந்த அற்புதங்கள் சிலவற்றை அவர் கண்டு அவற்றில் இருந்து பயனடைந்திருந்தார்.

எலிசாவின் பிரசன்னத்தில் இருத்தல் என்ற அரிய பாக்கியத்தைப் பெற்றுக்கொண்டிருந்த எவரொருவரும், அவரது வாழ்வு மற்றும் செய்தி ஆகியவற்றினால், தம்மையே முழுமையாகத் தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கும்படி நிர்ப்பந்தம் செய்யப்படுவார் என்று நாம் நினைக்கலாம், ஆனால் யோராம் அப்படிப்பட்ட உறுதிப்பாட்டை ஒருக்காலும் ஏற்படுத்தியது இல்லை. அவர் தேவனுடைய திகைப்பூட்டும் கிரியைகளைக் கண்டு, கேட்டு அவற்றில் பங்கேற்றிருந்தார்; ஆனாலும் அவர் தேவனுக்கு முழுமையாகத் தம்மை ஒப்புவிக்கும் வட்டத்திற்குப் புறம்பேதான் நின்றிருந்தார்.

உதாரணமாக, சீரியர்களின் இராணுவத்தினுடைய அசைவுகளைப் பற்றியும் இஸ்ரவேலுக்கு எதிரான அவர்களுடைய யுத்தத் திட்டங்களைப் பற்றியும், வெளிப்படுத்துதல்களை எலிசாவிடமிருந்து யோராம் பெற்றிருந்தார் (2 இராஜாக்கள் 6:10). இந்தத் தகவல்கள், யோராமை சீரியர்கள்மீது கூடுதலான வெற்றிகளை ஆதாயப்படுத்திக்கொள்ளக் கூடியவராக்கிற்று.

> அக்காலத்தில் சீரியாவின் ராஜா இஸ்ரவேலுக்கு விரோதமாய் யுத்தம் பண்ணி, "இன்ன இன்ன ஸ்தலத்திலே பாளயமிறங்குவேன்" என்று

*தன் ஊழியக்காரரோடே ஆலோசனைபண்ணினான். ஆகிலும் தேவனுடைய மனுஷன் இஸ்ரவேலின் ராஜாவினிடத்தில் ஆள் அனுப்பி: "இன்ன இடத்துக்குப் போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரும்; சீரியர் அங்கே இறங்குவார்கள் என்று சொல்லச் சொன்னான்." அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா தேவனுடைய மனுஷன் தன்னை எச்சரித்து, தனக்குக் குறித்துச் சொன்ன ஸ்தலத்திற்கு மனுஷரை அனுப்பிப் பார்த்து எச்சரிக்கையாயிருந்து, இப்படி அநேகந்தரம் தன்னைக் காத்துக்கொண்டான் (2 இராஜாக்கள் 6:8-10).*

எலிசாவின் மூலமாக வந்த, தேவனுடைய கிருபை மற்றும் வழிநடத்துதல் ஆகியவற்றின் இந்த வெளிப்பாடுகள் யோராமுக்குள் உண்மையான இருதயத்தையும் கீழ்ப்படிதலுள்ள ஆவியையும் உண்டாக்கி இருக்க வேண்டும். இருந்தபோதிலும், யோராம் மாற்றம் அடையாத ஒரு அரசர் என்ற வகையிலேயே தமது வேலைகளைச் செய்யச் சென்றார்.[5]

பிரிவுபட்ட இருதயம், சாட்சியத்தினால் பெரும்பாலும் பாதிக்கப் படுவதில்லை. அரை இருதயம் கொண்ட நபர், சத்தியம் தம்மீது கிரியை செய்யாத வகையில் இருக்கின்றார். அவரது சிந்தனையானது அவர் ஏற்படுத்தும் உறுதிப்பாட்டின் வகையினால் ஏற்படுத்தப்பட்டு, அவர் தமது முடிவை மாற்றமாட்டார் என்று உலகில் உள்ள எல்லா ஆதாரமும் விளக்கப்படுத்துகிறது.

ஒருவர், பென்சீலின் என்ற மருந்து தமது உடலில் கிரியை செய்யாத அளவுக்கு, மிக அதிகமாக அந்த மருந்து தமது உடலில் செலுத்தப்படு வதைப் பெறக்கூடும். அவர் உண்மையில் அம்மருந்து தமக்குத் தேவைப் படாத வேளையில் அதைத் தமது உடலில் செலுத்திக்கொள்வார் என்றால், அவரது உடல் அம்மருந்திற்குப் பழக்கமாகிவிடும்; பின்பு, அவர் தமது உடலில் தொற்றிக்கொண்ட ஒரு வியாதியுடன் போராடுவதற்காக உண்மையிலேயே தேவை ஏற்படும்போது, அது அவருக்கு எந்த நன்மையும் செய்வதில்லை. யோராம், தாம் பெற்றுக்கொண்ட தெய்வீக ஆதாரம் தம்மிடத்தில் கிரியை எதுவும் செய்ய இயலாத நிலைக்கு ஆளாகியிருந்திருக்க வேண்டும்.

யோராமுக்கு நடந்த நிகழ்ச்சியானது, பல ஆண்டுகளுக்கு முன்பு ஃபுளோரிடா மாகாணத்தின் மியாமி என்ற இடத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைக் கொண்டும் விவரிக்கப்படுகிறது. அங்கிருந்த பாம்புப் பண்ணை ஒன்றை இயக்கிவந்த அறிவியல் அறிஞர் ஒருவர், வடக்கு அமெரிக்காவுக்குக் கொண்டுவரப்பட்ட நாகபாம்புகளில் மிகவும் பெரிய ஒரு பாம்பினால் கொத்தப்பட்டார். அவர் விரைவாக மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டார், அங்கே அவர் ஒரு சிலநிமிடங்களில் இறந்துவிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும், எல்லாரும் திகைப்படையும்படி, அவர் இறந்துபோகவில்லை. அவர் மீண்டார். அவர் பாம்புப் பண்ணையில் வேலைபார்த்த நாட்களில், குறைவான விஷம் கொண்ட பாம்புகளால் அதிகமான முறைகள் கொத்தப்பட்டு, அதனால் அவர் ராஜ நாகம் கொத்தியபோது அதற்கெதிராகத் தமது உடலில் நோய் எதிர்ப்பு சக்தியைக் கட்டியெழுப்பிக் கொண்டிருந்தார் என்பதுதான் அவர்

பாதிக்கப்படாமல் இருந்ததற்குத் தரப்பட்ட ஒரே மருத்துவ விளக்கமா யிருந்தது.[6]

நமக்கு இதைப்போன்ற சிலவிஷயங்கள் ஆவிக்குரிய வகையில் நடைபெறக்கூடும். தேவனுடைய சத்தியத்திற்கான ஆதாரத்தை நாம் எதிர் கொண்டிருந்தும் அதை அலட்சியப்படுத்தினால், நாம் அந்த ஆதாரம் பற்றி உணர்வற்றுப் போகும் நேரம் வரலாம். யோராம் இவ்வாறு ஆகியிருக்க வேண்டும்.

**தேவனால் அங்கீரிக்கப்படாதிருத்தல்**

மூன்றாவது, அர்ப்பணிப்புள்ள வாழ்வை முற்றிலும் செயல்படுத்தாமல் இருக்கத் தீர்மானித்தலின் மாபெரும் தவறு யோராம் தேவனை அலட்சியப் படுத்தியதைக் கொண்டு, விவரிக்கப்பட்டுள்ளது. யோராம்மீது தேவன் கொண்டுவந்த நியாயத்தீர்ப்பானது, தேவனுடைய மக்களுக்கு அரசர் என்ற வகையில் அவர் [யோராம்] முற்றிலும் தோல்வியாளராய் இருந்தார் என்பதைத் தெளிவாக்குகிறது. யோராம் தமது துன்மார்க்கத்தில் இருந்து மனந்திரும்பி, மனந்திரும்புதலின் கனியைக் கொடுத்திருந்தால், ஒருவேளை தேவன் தமது நியாயத்தீர்ப்பை வேறொரு வேளைக்குத் தருவதற்காக நிறுத்தியிருக்கலாம். இருப்பினும், யோராம் தமது துன்மார்க்கத்தின் காரணமாக, ஆகாபின் வீட்டாரின்மேல் தேவனுடைய நியாயத்தீர்ப்புத் தண்டனையின் இறுதி நிறைவேற்றமாய் இருப்பார்.

எலிசா "தீர்க்கதரிசிகளின் புத்திரர்களில்" ஒருவரை தைலக் குப்பியுடன் கீலேயாத்தில் இருந்த ராமேத் என்ற இடத்திற்கு, யெகூவை இஸ்ரவேலின் அரசராக அபிஷேகம் செய்விப்பதற்காக அனுப்பினார் (2 இராஜாக்கள் 9:1). அந்த இளம் தீர்க்கதரிசி, யெகூவைத் தனியறைக்கு அழைத்துச்சென்று, யெகூவினுடைய தலையின்மீது தைலத்தை ஊற்றி, ஆகாபின் வீட்டார்மீது முடிவை இடும்படி அவருக்குக் கட்டளையிட்டார் (2 இராஜாக்கள் 9:3). யேசபேலின் கொலைவெறியான செயல்களினிமித்தம், யேசபேல் நாய்களால் தின்னப்படுவாள் என்று நாபோத்தின் திராட்சத் தோட்டத் திற்கு அருகில் எலியா தீர்க்கதரிசனம் உரைத்திருந்தார் (1 இராஜாக்கள் 21:17-24). அந்தத் தீர்க்கதரிசனம் உண்மையாகும்படியான காலம் வந்தி ருந்தது.

இப்போது இஸ்ரவேலின் அரசராயிருந்த யெகூ, தேவனாலேயே இந்த நியமனத்தைப் பெற்றவராக, யெஸ்ரயேலுக்கு விரைந்து சென்றார், அங்கே யோராம், சீரியர்களுடன் தாம் செய்த யுத்தத்தின் விளைவாக ஏற்பட்ட காயங்களை ஆற்றிக்கொண்டிருந்தார் (2 இராஜாக்கள் 9:14-16). குதிரைகள் பூட்டப்பட்ட இரதமொன்று வருவதாக யோராமுக்குக் கூறப்பட்டது, ஆனால் யார் வருவது என்பது பற்றிய தகவல் எதையாகிலும் அவரால் பெற முடியாதிருந்தது (2 இராஜாக்கள் 9:17-20). போர்வீரர்களின் குழுவை வழிநடத்திய ஒருவரின் அடையாளத்தைத் தெரிந்துகொள்வதற்கென்று அவர் அனுப்பிய ஒவ்வொரு செய்தியாளரும் அந்தக் குழுவினருடன் சேர்ந்துகொண்டு, அவர்களுடன் பயணித்தனர். என்ன நடந்துகொண் டிருந்தது என்பதைக் காண்பதற்காகக் கடைசியில் யோராமும் அவரைப்

*பார்க்க வந்திருந்த யூதாவின் அரசரான அகசியாவும் சென்றனர் (2 இராஜாக்கள் 9:21, 22). அவர்கள் போதிய அளவு நெருங்கியபோது, அவர்களை நெருங்கிக்கொண்டிருந்தது யெகூதான் என்று யோராம் தீர்மானித்தார். யெகூ சூழ்ச்சியில் ஈடுபட்டிருப்பதாக அவர் அறிவித்தார். அவர் யேசபேல் ராணியைக் கொல்வதற்காக யெஸ்ரயேலுக்குத் தீவிரமாய் முன்னோக்கிச் சென்றார்.*

*யோராம், "இது சதி!" என்று கூவிக்கொண்டே தம் இரதத்தைத் திருப்பினார். அவர் யெஸ்ரயேலின் பாதுகாக்கப்பட்ட மதில்களுக்குள் பின் திரும்பிச் சென்றுவிட விரும்பினார். யெகூ பல ஆண்டுகளாகக் குறிபார்த்து அம்பெய்பவராய் இருந்தார். அவர் தமது வில்லை எடுத்து யோராமுக்குள் புகுந்து வெளியேறும்படிக்கு ஒரு அம்பை எய்தார் (2 இராஜாக்கள் 9:24). அந்த அம்பு அவருடைய நெஞ்சைப் பிளந்து வெளியேறியது, மற்றும் யோராம் தமது இரதத்தில் சுருண்டு விழுந்தார். அவரது உடல் நாபோத்தின் வயல்நிலத்தில் எறியப்பட்டது (2 இராஜாக்கள் 9:24-26) அது தேவனுடைய நியாயத்தீர்ப்பு நிறைவேறியதன் தெளிவான நினைவூட்டுதலாக இருந்தது. அகசியாவும் யெகூவினால் காயம்பட்டு (2 இராஜாக்கள் 9:27), மெகிதோவுக்கு ஓடிப்போனார், அங்கே அவர் பிற்பாடு யெகூவின் படைவீரர்களால் பிடிக்கப்பட்டு, சமாரியாவுக்குக் கொண்டு வரப்பட்டு, கொன்றுபோடப்பட்டார் (2 இராஜாக்கள் 9:27, 28; 2 நாளாகமம் 22:7-9). யெகூ யெஸ்ரயேல் நகருக்குச் சென்று யேசபேலைக் கொன்றுபோட்டார், இவ்விதமாக, ஆகாபின் வீட்டுக்கு ஒரு முடிவு கொண்டுவரப்பட்டது (2 இராஜாக்கள் 9:30-33).*

*யோராமின் வாழ்வினுடைய முடிவில் நடந்த இந்நிகழ்ச்சி, அவர் எலிசா போன்ற தேவபக்தியுள்ள மனிதர்களால் இழிவாகக் கருதப்பட்டது மட்டுமின்றி, தேவனாலும் நியாயந்தீர்க்கப்பட்டார் என்று காண்பிக்கிறது. ஆவிக்குரிய வகையில் கோழையாயிருப்பவர், தேவனாலும் மனிதராலும் புறக்கணிக்கப்பட்டு தவிர்க்கப்படுகின்றார். ஒரு மாய்மாலக்காரர்கூட இன்னொரு மாய்மாலக்காரரை விரும்புவதில்லை. விசுவாசத்தின் அனுபவச் செயலைத்/அறிக்கையிடுதலைத் தொடர்ந்து, தியாகம் நிறைந்த தேவபக்தியுள்ள வாழ்வு ஏற்பட வேண்டும், அல்லது அது ஒரு வெறுமையான உரிமைகோருதலாக, பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும் தகுதியற்றதாக இருக்கும்.*

## ஒரு தற்கால நடைமுறைப் பயன்பாடு

*ஒரு சிறிய அடிவைத்தல் மாத்திரம் மேற்கொள்ளுதல் என்ற யோராமின் தவறை, நாம் "யோராம் ஏன் அவ்வாறு செய்தார்? அவர் ஏன் தம்மைச் சுற்றிலும் இருந்த மதக்காட்சியைத் திருப்பும் அரசராகவில்லை? அவர் ஏன் தேவனிடம் முழுமையாகச் செல்லவில்லை?" என்று கேட்பதன்மூலம் நமது தற்காலச் சூழ்நிலைக்கு சுலபமாக நடைமுறை பயன்பாட்டை ஏற்படுத்த முடியும். இவைபற்றி நாம் நிச்சயமாய் அறிய இயலுவதில்லை, ஆனால் பின்வருவதை நாம் அறிந்திருக்கின்றோம்: யோராம், அவசியமான அடிவைப்புகளை மேற்கொண்டு தேவனுடனான நடையை முற்றிலும்*

பின்பற்றியிருந்தால் - அவர் தேவன் விரும்பியவாறு வாழ்வதில் ஒரே ஒரு முடிவை மாத்திரம் ஏற்படுத்தலுக்கு அப்பாலும் சென்றிருந்தால் - அவர் வெற்றிகொள்வதற்குக் குறைந்தபட்சம் மூன்று தடைகளைக் கொண்டிருந்து இருப்பார்.

முதலாவது, அவர் பாரம்பரியத்தின் கடினத்தன்மையை எதிர் கொண்டிருந்து இருப்பார். நாட்டை முழுமையான உயிர்ப்பித்தலில் வழிநடத்துதலுக்கு அவர், தாண் மற்றும் பெத்தேல் ஆகிய இடங்களில் இருந்த பொன்கன்றுக்குட்டி ஆராதனையை நீக்கிப்போட வேண்டியதாக இருந்திருக்கும். நாட்டில் அப்படிப்பட்ட ஒரு சுத்திகரிப்பானது, வடக்கு ராஜ்யத்தின் வேறு எந்த நடத்துனராலும் சாதிக்கப்பட்டிராத சாதனையாக இருந்திருக்கும். பொன்கன்றுகுட்டிகளை மக்கள் தங்களது தேசீய அடையாளமாகக் கண்ணோக்கும் அளவுக்கு இஸ்ரவேல் நாட்டின் முக்கியபாகமாய் இருந்தன. ஆராதனைக்கான இந்த இடங்கள், யூதா மற்றும் பென்யமீன் கோத்திரங்களிடத்தில் இருந்து மற்ற பத்துக்கோத் திரங்கள் பிரிந்து சென்ற தொடக்ககாலத்திலேயே அமைக்கப்பட்டிருந்தன. அவற்றை இடித்துப்போடுதலுக்கு, தானியேல் அளவுக்கு உரம் வாய்ந்த தேசத்தலைமைப் பண்பு தேவையாயிருந்தது. விக்கிரகாராதனை என்பது மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும், அவர்களின் சிந்தனையில் ஊறிப்போனதாகவும்/ஒன்றாய்க் கலந்ததாகவும் ஆகியிருந்தது. பொன் கன்றுகுட்டிகளை நீக்கிப்போடுவதில், யோராம் ஏறக்குறைய முழு இஸ்ரவேல் நாட்டின் நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றை அறுத்துப்போட வேண்டியதாக இருந்திருக்கும். அது நாடு முழுவதற்கும் எதிராக ஒரு மனிதன் எழுந்து நிற்பதாயிருக்கும். அதைச் செய்ய, அரசருக்கு மிக உயர்ந்த தைரியமும், தெளிவான தொலைநோக்கும், துன்பங்கள் மத்தியிலும் அப்படிப்பட்ட ஒரு இலக்கைச் சாதிப்பதற்குத் தீர்மானமான கொள்கையும் தேவையாய் இருந்திருக்கும். யோராம் அந்த அளவுக்கான உறுதிப்பாட்டையும் தைரியத்தையும் கொண்டிருக்கவில்லை.

இரண்டாவது, அவர் அரசியின் செல்வாக்கினால் ஏற்படும் பிரச்ச னைகளை எதிர்கொள்ளவேண்டி இருந்திருக்கும். ஒரு முழுமையான உயிர்ப்பித்தல் என்பது, நாட்டில் இருந்து பாகாலுக்குச் செய்யப்படும் ஆராதனையை முற்றிலுமாகத் துடைத்துப்போடுவதை அவசியமாக்கி யிருக்கும். அரசரின் தாயான யேசபேல், இன்னமும் உயிருடன் இருந்தாள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அவள் எப்படியேனும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கலாம்; ஆனால் அவளது பண்பு மற்றும் ஆவியுடன், இஸ்ரவேல் நாட்டில் பாகாலுக்கு ஆராதனை செய்யும் மையங்கள் எல்லாம் அழிக்கப்படுதலை, அவள் சகித்திருக்க முடியாது. யோராமின் தாயாகவும் அரசியாகவும் இருந்த வகையில், அவள் அவர்மீது மாபெரும் செல்வாக்குச் செலுத்துபவளாக இருந்திருப்பாள். யோராம், பாகாலைச் சரியான வகையில் கையாள்வது என்று தீர்மானித்திருந்தால், அந்த வீட்டாரிடத்தில் என்ன காரியங்கள் நடந்திருக்கும் என்று உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? அவரது வாழ்வை யேசபேல் பரிதபிக்கப்படக் கூடியதாக ஆக்கியிருப்பாள்.

மூன்றாவது, அவர் அப்படிப்பட்ட பரவலான உயிர்பித்தலை உருவாக்கியிருக்கக்கூடிய பெரிய அளவிலான சீர்குலைவின் அசௌகரி யத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்திருக்கும். மனந்திரும்புதல் மற்றும் சீரமைத்தல் ஆகியவற்றின் மாற்றங்கள் குறித்து மக்கள் "ஒவ்வாமை" உள்ளவர்களாய் இருக்கின்றனர். தேவனுக்கு உண்மையிலேயே அர்ப்பணித்தல் என்பது, யோராம் நாட்டில் இருந்தும் மக்களின் மனங்களில் இருந்தும் அயல்தெய்வங்கள் யாவற்றையும் இடித்துத் தள்ளுவதையும், மனிதனால் உண்டாக்கப்பட்டிருந்த மதங்கள் யாவற்றையும் நீக்கிப்போடுவதையும், இஸ்ரவேல் மக்களை தேவனுடைய வசனத்திற்குத் திரும்பும்படி வழிநடத்துவதையும் அவசியமாக்கியிருக்கும். ஆவிக்குரிய இந்தப் புரட்சியைத் தொடர்ந்து, நாடு முழுவதும் வீடுகளைச் சுத்திகரித்தல் அவசியமாயிருக்கும். இப்படிப்பட்ட ஒரு இயக்கத்திற்கு எதிராகப் பிசாசானவன் வலிவுடனும் ஒருவேளை வன்முறையுடனும் கூடப் போராடியிருப்பான்.

சிரமத்தின் இந்தக் குன்றுகள் யோராமுக்கு உயரமானவைகளாகவும் தடைசெய்பவைகளாகவும் இருந்திருக்கும். இவற்றின்மீது ஏறுதலுக்கு, முழுமையான உறுதிப்பாடும் தேவன்மீது முற்றிலும் சாய்ந்து கொள்வதும் அவசியமாய் இருந்திருக்கும். இவ்வகையான உயிர்ப்பித்தல் பற்றி நினைத்துப்பார்த்தலே யோராமைக் களைப்படையச் செய்திருக்கும். இதைச் செய்வதற்கு அவர் தேவனிடத்தில் அர்ப்பணித்தல் அல்லது பக்தியைக் கொண்டிருக்கவில்லை. தம் ஆட்சியில் அமைந்து அதை மகிழ்வுடன் அனுபவித்தல் - அவசியம் ஏற்பட்டால் மக்களினிமித்தமாக, தமது தந்தை பொதுவிடத்தில் அமைத்திருந்த உருவச்சிலையை அகற்றிப்போடுதலினால் தேவனை நோக்கி நகருவதாக ஒரு சிறு சைகை காண்பித்தல் - என்பது அவருக்குச் சுலபமான பதில்செயலாக இருந்தது.

யோராமின் முடிவானது இன்றைய நாட்களில், கிறிஸ்தவ வாழ்வு பற்றி நாம் மேற்கொள்ளும்படி அழைக்கப்படும் முடிவுகளிலிருந்து தொலைவில் நீக்கப்பட்டிருப்பதில்லை. உண்மையில் நாம், "புல்லறிவு கொண்ட மனிதன்! அவர் ஏன் தேவனுடைய சித்தத்தை முழுமையாகப் பின்பற்றியிருக்கவில்லை? அவர் அவ்வாறு செய்திருந்தால், நாம் அவரை ஆபிரகாமுக்கு அருகில் உயர்த்திப் பிடித்து வாழ்த்தியிருப்போமே" என்று கூற முடியாது. நாம் இவ்வகையான கூற்றை ஏற்படுத்துவோமென்றால், "நம்மைப் பற்றிய விஷயம் என்ன? நாம், தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு நம்மை முழுமையாக ஒப்புக்கொடுத்திருக்கின்றோமா? நிபந் தனையற்ற ஒப்புக்கொடுத்தலுக்குப் பதிலாக நாம் சுலபமான வழியை மேற்கொண்டிருக்கின்றோமா?" என்று நம்மை கேட்டுக்கொள்வதற்கு முன்பு இவ்வார்த்தைகள் நமது வாயில் இருந்து வெளியேறாது.

நம்மை முழுவதும் தேவனுக்கு ஒப்புக்கொடுத்தல் என்பது அதே மூன்று குன்றுகளின்மீது நாம் ஏறுவதைக் கேட்பதாயிருக்கும். முதலாவது, நாம் பாரம்பரியத்தின் சரிவில் ஏறவேண்டும். இன்றைய நாட்களில் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவராய் இருத்தல் என்பது, நாமகரணத்துவத்தை விட்டுச் செல்வதாகவும், கிறிஸ்துவின் சபையாக மாத்திரமே வாழ்தலாகவும்

அர்த்தப்படுகிறது. வேதாகமத்தில் நாமகரணக்கூட்டங்கள் எதுவும் காணப்படுவதில்லை, அப்படிப்பட்டவற்றை அமைப்பதற்குத் தேவன் அங்கீகாரம் அளித்திருப்பதில்லை. அவர் நம்மைக் கிறிஸ்துவின் சரீரமாக மாத்திரம் இருக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார். மனிதக் கண்டுபிடிப்பு, பணம், மற்றும் அதிகாரம், ஆகியவற்றினால் மத உலகத்தில் திணிக்கப் பட்டுள்ள நாமகரணக்கூட்டங்களின் கட்டுமானங்களை எதிர்த்து நிற்குதல் என்பது நம்மைத் தனிப்படுத்தி, நம்மால் நாமே ஒரு தரத்தில் அமையச் செய்கிறது. புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவராயிருத்தல் என்ற சாலையில் பயணிக்கும் ஒருவர் அடிக்கடி தனிமையில் பயணிக்கின்றார். அவர் அல்லது அவள் நாமகரணக்கூட்டத்திலிருந்து ஊக்குவிப்பைப் பெறுவதில்லை, ஏனெனில் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவம் நாமகரணத்து வத்தைக் கண்டனம் பண்ணுகிறது.

இரண்டாவது, தேவனுக்கு முற்றிலும் ஒப்புவித்தவர்களாய் இருத்தல் என்பது இயல்புநிலை கெடுவதன் அசௌகரியத்தை அவசியப்படுத்துகிறது. நம்மைச் சுற்றிலும் உள்ள நாமகரணத்துவத்தைப் புறக்கணித்தல் என்பது, நாம் அறிந்துள்ள தேவபக்தியுள்ள மக்களின் நடுவில் நம்மைப் பிரபலமற்றவர்கள் ஆக்குகிறது. நாமகரணக்கூட்டங்கள் வேதவசனத்தின் படியானவைகள் அல்ல மற்றும் தேவனால் அங்கீகரிக்கப்பட்டவைகள் அல்ல என்று நாம் குறிப்புக்காண்பித்தால்கூட, அவர்கள் நம்மை குறுகிய புத்தியுள்ளவர்கள் என்றும் இரக்கமற்றவர்கள் என்றும் கருதும் அளவுக்கு, அவர்கள் நாமகரணக்கூட்டங்களுடன் அவர்கள் கொண்டுள்ள தொடர்பானது, அவர்களின் குடும்பங்கள், பதவிகள், மற்றும் அவர்களின் வாழ்வில் நெருக்கமாய்ப் பிணைக்கப்பட்டுள்ளது. எங்குமுள்ள பிரசங்கியார்கள், தாங்கள் பிரசங்கிக்கும் சபைக்கூட்டங்களுக்கு முன்பாக எழுந்து நின்று, நாமகரணக்கூட்டங்களில் இருந்து வெளியேறும்படி - மற்றும் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களாக மாத்திரம் இருக்கும்படி - உறுப்பினர்களை வேண்டிக் கேட்டுக்கொண்டால் அதன் விளைவாக எழக்கூடிய கலகத்தையும் மனக்கலவரத்தையும் பற்றி நினைத்துப் பாருங்கள்! மக்களைத் தேவனிடத்தில் முற்றிலும் திருப்புவதற்காக, யோராம் ஒரு முழுமையான உயிர்ப்பித்தலை நேர்மையுடன் நடத்தியிருந்தால், தேவனுடைய சித்தத்திற்கு அமைதியாக எவ்விதத்திலும் ஒப்புக்கொடுப்பதற்கு முன்பு குழப்பம் ஏற்பட்டிருக்கும்! கீழ்ப்படிதலின் அமைதி நிலைக்கு முன்பாக கலகம் வந்தாக வேண்டும். புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தை அதன் தூய்மையுடன் மீளக்கட்டுவிக்க விரும்புகின்ற ஒவ்வொருவராலும் இதே சிரமம் எதிர்கொள்ளப்படுகிறது.

மூன்றாவது, நாம் நமது சக நண்பர்களின் இழுத்தலை உடைத்துப் போட வேண்டியிருக்கும். பொதுவாக, சகநண்பர்கள் நம்மைக் கிறிஸ்துவை நோக்கியல்ல, ஆனால் அவரைவிட்டுப் புறம்பே இழுத்து வீழ்த்தும்படி வற்புறுத்துகின்றனர். சராசரிக் கிறிஸ்தவர்கள்கூட கிறிஸ்துவுக்கு முற்றிலுமாக ஒப்புக்கொடுத்தலை எதிர்த்து நிற்கின்றனர். தனது பதினாறு வயதில் கிறிஸ்தவராக மாத்திரம் ஆக விரும்பிய ஒரு இளம் பெண்மணியைப் பற்றி எனக்குத் தெரியும். அவள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற

*பின்பு, கிறிஸ்துவுக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்ததால் தனது இருதயத்தில் உண்டான புதிய சந்தோஷத்துடன், தனது இல்லத்திற்குச் சென்றாள். அவள், தான் செய்ததைப் பற்றித் தனது பெற்றோர்களிடம் கூறியபோது, அவர்கள் "நீ ஏன் அதைச் செய்தாய்?" என்று கேட்டு அவளைத் திட்டினார்கள். அது எவ்வளவாக இருதயத்தை உடையச் செய்வதாயிருக்கும்! அந்த நாளில் இருந்து இந்த நாள் வரையிலும், கிறிஸ்துவுடனான அவளது வாழ்வு, அவளது இல்லத்தில் அவள் தனிமையில் போராடும் வாழ்வாக இருந்துள்ளது. அவள் தனக்கு நெருங்கியவர்களிடத்தில் இருந்து, தனது கிறிஸ்தவ வாழ்விற்கு அன்பான ஊக்குவித்தலை ஒருக்காலும் பெற்றதில்லை. சபையும் அதன் அன்பார்ந்த ஐக்கியமும் இல்லாதிருந்தால், அவள் அனேகமாக இப்படிப்பட்ட ஊக்கத்தைக் குறைக்கும் சூழ்நிலையைச் சமாளித்திருக்க மாட்டாள்.*

*இப்படிப்பட்ட உயரமும் கரடுமுரடுமான குன்றுகள் நமக்கு முன் இருக்கையில், பின்வருவது போன்று சொல்வது மிகவும் சுலபமாக இருக்கிறது, "நான் தேவனுக்கு ஒரு சிறிதே தனிப்பட்ட ஒப்புக்கொடுத்தல் செலுத்தினால் போதுமானது. நான் பாகாலின் ஒரு சிறு பலிபீடத்தை மாத்திரம் இடித்துப் போடுவேன். தேவனுடைய சித்தத்தின்படியான நடையில் முற்றிலுமாக நான் செல்லத் தேவையில்லை. நான் எனது நண்பர்கள் மத்தியில் மதிக்கப்படவும் அவர்கள் விரும்பக்கூடிய வகையில் இருக்கவும் விழைகின்றேன். ஏன் மதத்தில் ஆழ்ந்த பற்றுக் கொண்டிருக்க வேண்டும்? வேதாகமத்திற்கு முற்றிலுமாகப் பின்திரும்பிச் செல்வதும் நாம் எவ்வாறு இருக்க வேண்டுமென்று கர்த்தர் கேட்டுள்ளாரோ, அவ்வாறு எல்லாவற்றிலும் இருப்பது என்பது மிக அதிகமானதாக உள்ளதல்லவா! அத்துடன், நாமகரணக்கூட்டத்தார் ஏராளமான நற்காரியங்களைச் செய்கின்றனர்; அவர்கள் எல்லாரும் மோசமானவர்களாய் இருக்க முடியாது. நீங்கள் உண்மையாகவே வேதவசனங்களைப் பின்பற்ற முயற்சி செய்யும்போது, அது மக்களுடன் வாதிடுவதில் முடிவடைகிறதல்லவா. நான் எல்லாவற்றையும் தனியேவிட்டுவிட்டு, ஒரு சிறிதளவே ஒப்புக் கொடுப்பேன்" என்று கூறுதல் சுலபமாகிறது. அது பழக்கமானதாக ஒலிப்பதில்லையா?*

## *முடிவுரை*

*யோராமின் அடையாள முடிவானது, இன்றைய நாட்களில் நாம் மேற்கொள்ளும் சில முடிவுகளில் இருந்து உண்மையில் அவ்வளவு மாறுபட்டதாக இருப்பதில்லை அல்லவா? நாம் அவரது தெரிவிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு அதைப் பிரதியாக்கம் செய்யாதிருப்போமாக. ஒரு அடிவைப்பு மாத்திரம் எடுத்து வைப்பதற்குப் பதிலாக, உண்மையான நடையைக் கொண்டு - நாம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று கிறிஸ்து கேட்டுக் கொண்டாரோ அவ்வாறே இருக்கும் பயணத்தை, அது எதை அர்த்தப்படுத்தினாலும், அது எங்கே நம்மை நடத்திச் சென்றாலும் தொடர்ந்து செல்லும் நடையைக் கொண்டு - அடிவைப்பைத் தொடர்ந்து முன்னேறிச் செல்வோமாக.*

*யோராம் உண்மையாகத் தேவனைப் பின்பற்றியிருந்தால், அவர் ஆசீர்வதிக்கப்பட்டவராக இருந்திருப்பார். யேசபேல் அவரை ஊக்கப்படுத்தியிருக்கமாட்டாள், நாடானது மாற்றங்கள் குறித்து முறையிட்டு அவரைக் கடுமையாக விமர்சித்திருக்கும். இருப்பினும், தேவன் அவரை அங்கீகரித்திருப்பார், எலிசா அவரைப் பாராட்டியிருப்பார், மற்றும் அவர் தேவனுக்காக வாழ்ந்திருந்த மற்ற ஏழாயிரம் மக்களின் ஐக்கியத்தைக் கொண்டிருந்திருப்பார். அவர் தமது வாழ்வில் தேவனுடைய பலத்தையும் வல்லமையையும் கண்டிருப்பார். அவர் இவ்வுலகத்திற்கு, உயர்த்திப் பிடிக்கப்படக் கூடியதும் இயேசு வரும்வரை இழுத்து வைத்திருக்கப்படக் கூடியதுமான நீதியின் நினைவுகளுடைய வரலாற்றை விட்டுச் சென்றிருப்பார். ஆம், யோராம் ஆசீர்வதிக்கப்பட்டவராய் இருந்திருப்பார்!*

*இந்த வாக்குத்தத்தங்கள் யாவும் இதேபோன்று நமக்குரியதாகவும் உள்ளது. நீங்கள் தேவனுடன் நடக்கத் தீர்மானம் செய்து, அதே தீர்மானத்தை உண்மையுடன் இறுதிவரையிலும் எடுத்துச் செல்வீர்களா? உண்மையான கிறிஸ்தவராக இருப்பதற்குத் தைரியம் கொள்ளுங்கள்! ஆம், நீங்கள் துன்புறுத்தப்படுவீர்கள் (2 தீமோத்தேயு 3:12). நீங்கள் செய்துகொண்டிருப்பது என்ன என்பதை உங்கள் நண்பர்கள் புரிந்துகொள்ளாதிருக்கலாம், ஆனால் தேவனுக்கு உரியவர்கள் உங்களுடன் நிற்பார்கள். நீங்கள் தேவனை அறிந்தும் அவரால் அறியப்பட்டும் இருப்பீர்கள். மனிதர்களிடத்தில் இருந்து அல்ல, ஆனால் பரலோகத்தில் இருந்து நீங்கள் கைதட்டல்களைப் பெறுவீர்கள். நீங்கள் அமைக்கும் உதாரணம் மிகவும் முழுமையானதாகவும் சாத்தியமான வகையில் அர்த்தம் நிறைந்ததாகவும் இருக்கும். நீங்கள், தேவன் உங்களிடத்தில் கேட்டுக்கொள்கிற வகையில் தேவனுக்காக வாழ்வீர்கள், மற்றும் நீங்கள் அவரது பாதுகாப்பு மற்றும் வாக்குத்தத்தங்களின் கீழ் இருப்பீர்கள். நீங்கள் அவர் தருகிற நித்திய ஜீவனைக் கொண்டிருப்பீர்கள். உங்கள் பாதுகாப்பிற்கு அவரே பொறுப்பாயிருப்பார். அவர் உங்களை, உங்களுக்கு முன்னால் தோற்றம் தருகிற அக்கினிச் சூளைகளில் இருந்து அல்லது அவற்றினூடே உங்களை விடுவிப்பார். ஒருசிலரே உங்களுடன் இணைவார்கள், ஆனால் நீங்கள், கிறிஸ்து தமது இரத்தத்தைக் கொண்டு பரவியுள்ள கிறிஸ்தவத்தின் சாலையில் நடப்பீர்கள்.*

*தேர்ந்துகொள்ளுதல் நம்முடையதாக உள்ளது: நாம் யாரைப் பின்பற்றுவோம்? யோராமையா அல்லது இயேசுவையா?*

***கற்க வேண்டிய பாடம்:***
***நடையினால் பின்பற்றப்படாத வரையில்***
***முதல் அடிவைத்தல் என்பது மதிப்பற்றதாகும்.***

---

*குறிப்புகள்*

[1]Dick Marcear, *Central Herald*, Central Church of Christ, Amarillo, Tex. [2]"Jehoram" *என்பது சில வேளைகளில்* "Joram" *என்று சுருக்கப்பட்டுள்ளது.* [3]*அனேகமாக மற்ற சில இடங்களில், மூன்று அரசர்கள் மற்றும் மோவாபியரின் பார்வைக்கு மறைவாக தேவன் ஒரு கனத்த மழையைக் கொண்டு வந்தார், அது நீரோடைகளிலும் குன்றுப்பகுதிகளிலும் வழிந்து ஓடி, மூன்று அரசர்களும் அவர்களின் சேனைகளும் முகாமிட்டிருந்த இடத்திற்குப் பாய்ந்தோடி வந்த தண்ணீரை அனுப்பிற்று எனப்படுகிறது. அந்தத் தண்ணீர் வாய்க்கால்களில் பிடிபட்டு தக்கவைத்துக் கொள்ளப்பட்டிருந்தது. சரியான நேரத்தில் பெய்த மழையும் அது பெய்த இடமும் அற்புதமாக இருந்தது.* [4]*இந்த யுத்தம் பற்றி மோவாபியக் கல்வெட்டில் உள்ள விவரங்கள், மேசா தமது நாட்டை, அந்த மூன்று அரசர்களிடத்தில் முற்றிலுமாகத் தோல்வியடைவதில் இருந்து காப்பாற்ற, தமது மூத்த மகனைப் பலியிட்டது பற்றிக் கூறுவதில்லை. மோவாபியக் கல்வெட்டில் உள்ள மேசாவின் வார்த்தைகள், அவர் இஸ்ரவேல் நாட்டைத் தோல்வியடையச் செய்ததாகப் பெருமை பாராட்டுகின்றன. மேசா தமது மகனை பலியிட்டபோது, அந்த மூன்று அரசர்களும் மேசாவை விட்டுப் புறப்பட்டுச் சென்றனர் என்பது உண்மையாக உள்ளது, ஆனால் மேசா இஸ்ரவேல் நாட்டைத் தோல்வியடையச் செய்தார் என்பது உண்மை அல்ல.* [5]*யோராம், தேவனுடைய சத்தியங்களை நம்பி இணங்குவதற்கு மற்ற வாய்ப்புக்களையும் கொண்டிருந்தார்: அவர், எலியாவுக்கும் பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கும் இடையில் நடைபெற்ற போராட்டத்தைக் காண்பதற்குக் கர்மேல் மலையில் இருந்திருக்கலாம் (1 இராஜாக்கள் 18). அவர் அங்கு இராதிருந்தால், அது பற்றிய விவரங்களைக் கேள்விப்பட்டிருக்கலாம். அவர் எலிசா நாகமானை யோர்தான் நதியில் ஏழுதரம் மூழ்கும்படி கேட்டு அவரைக் குணமாக்கிய நிகழ்ச்சியை அறிந்திருந்தார் என்பதில் சந்தேகம் இல்லை (2 இராஜாக்கள் 5). அவர் சமாரியாவின் முற்றுகை பற்றிய எலிசாவின் உண்மைநிறைந்த தீர்க்கதரிசனம் பற்றி அறிந்திருந்தார் (2 இராஜாக்கள் 6:24-7:20). இந்த மூன்று நிகழ்ச்சிகளுடன் கூடுதலாக வேதவசனங்களில் தரப்பட்டுள்ள மற்ற விவரங்களும், எலிசாவின் நீண்ட ஊழியம் யோராமின் ஆட்சியுடன் இணைவாயிருந்தது என்று காண்பிக்கின்றன. அவர் உண்மையான ஒரே தேவனைப் பற்றிய சத்தியத்தைப் பற்றிக் கேள்விப்படுவதற்கு அடிக்கடி சந்தர்ப்பங்களைக் கொண்டிருந்தார் என்பது தெளிவு.* [6]*இந்த இரு விவரிப்புகளும் வில்லியம்* S. *பனோவ்ஸ்கி என்பவரால் அவரது* "The Point of No Return" *என்ற பிரசங்கத்தில் கருத்தாகக் கூறப்பட்டுள்ளன* (William S. Banowsky, *The Great Preachers of Today Series* [Abilene, Tex.: Biblical Research Press, 1967], 108).